©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை : ரூ. 4.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 157A] சென்னை, செவ்வாய்க்கிழமை, ஜூன் 30, 2009
ஆனி 16, திருவள்ளுவர் ஆண்டு — 2040

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

### பொருளடக்கம்

| | பக்கங்கள் |
|---|---|
| **சட்டமுன்வடிவுகள் :** | |
| எண் 14/2009—தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் சட்டம் .. | 2–9 |
| எண் 15/2009—திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் .. .. .. .. | 11 –12 |

**2009—ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2009**

**தமிழ்நாடு மாநிலத்தில் திருமணங்கள் அனைத்தையும் கட்டாயமாகப் பதிவு செய்வதற்காகவும், அதனோடு தொடர்புடைய அல்லது அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்கும் வகை செய்வதற்கானதொரு சட்ட முன் வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2009-ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு, அறிவிக்கை வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள்வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாய், வேறுபொருள் குறித்தாலன்றி,

(a) "மாவட்டப் பதிவாளர்" என்றால், 4-ஆம் பிரிவின் (2)—ஆம் உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட, மாவட்ட திருமணப் பதிவாளர் ஒருவர்" எனப் பொருள்படும்,

(b) "அரசு" என்றால், மாநில அரசு என்று பொருள்படும்;

(c) "திருமணம்" என்றால், அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதனின்படியும் அல்லது எந்த வடிவத்திலும் அல்லது முறையிலுமான வழக்கம் அல்லது வழக்காறு எதனின்படியும், எந்த சாதியினரையும் அல்லது சமயத்தினரையும் சார்ந்த நபர்களால் நடத்தப்படும் அனைத்துத் திருமணங்களையும் உள்ளடக்குவதோடு, மறு திருமணத்தையும் கூட உள்ளடக்கும்;

(d) "குறிப்பாவணம்" என்றால், 5-ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட திருமணக் குறிப்பாவணம் என்று பொருள்படும்;

(e) "சமயகுரு" என்றால், 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் 7-A எனும் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள திருமணத்தை நடத்தி வைக்கும் நபர் எவரும் என்று அல்லது திருமணத்தில் முன்னிலையாகும் நபர் எவரும் என்று பொருள்படும்; மையச் சட்டம் XXV/1955.

(f) "பதிவாளர்" என்றால், 4-ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட திருமணப் பதிவாளர் ஒருவர் என்று பொருள்படும்;

(g) "தலைமைப் பதிவாளர்" என்றால், 4-ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட திருமண தலைமைப் பதிவாளர் என்று பொருள்படும்;

(h) "மாநிலம்" என்றால், தமிழ்நாடு மாநிலம் என்று பொருள்படும்.

திருமணங்கள் கட்டாயமாகப் பதிவு செய்யப்படுதல் வேண்டும் எனல்.

3. இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்றும் அது முதற்கொண்டும் செய்யப்படும் ஒவ்வொரு திருமணமும், அத்திருமணம், திருமணத் தரப்பினரின் வேறு இனமுறைச் சட்டங்கள் (Personal Laws) அல்லது வழக்கம் அல்லது வழக்காறு அல்லது மரபு எதனாலும் ஆளப்படும் திருமணப் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டிருந்தது என்பது உண்மையாகவே இருந்த போதிலும், இந்தச் சட்டத்தின்படி பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

தலைமைப் பதிவாளரையும் மாவட்டப் பதிவாளரையும் திருமணப் பதிவாளரையும் நியமித்தல்.

4. (1) அரசு, அறிவிக்கை வாயிலாக, தமிழ்நாடு மாநிலத்திற்காக திருமண தலைமைப் பதிவாளராக நபர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(2) அரசு, அறிவிக்கை வாயிலாக இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் மாவட்ட திருமணப் பதிவாளராக நபரொருவரை நியமித்தல் வேண்டும்.

(3) அரசு, அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, தாம் தேவையெனக் கருதும் அத்தகைய எண்ணிக்கையில், அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கலாகும் அத்தகைய வட்டாரப் பகுதிகளுக்காக திருமணப் பதிவாளராக இருப்பதற்கு நியமித்தல் வேண்டும், மற்றும் அத்தகைய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்காக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பதிவாளர்கள் நியமிக்கப்படலாம்.

(4) ஒவ்வொரு மாவட்டப் பதிவாளரும், பதிவாளரும் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும், அத்தகைய கடமைகளைப் புரிதலும் வேண்டும் மற்றும் தலைமைப் பதிவாளரின் பொதுவான கண்காணிப்பின் மற்றும் கட்டுப்பாட்டின்கீழ் இருத்தல் வேண்டும்.

திருமணக் குறிப்பாவணம்.

5. (1) திருமணம் ஒன்றின் தரப்பினர்கள், வகுத்துரைக்கப் படக்கூடிய அத்தகைய படிவத்தில் குறிப்பாவணம் ஒன்றை இரட்டைப்படியாகத் தயாரித்து, திருமணத் தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள், எந்தப் பகுதியில் திருமணம் நடைபெறுகிறதோ, அந்தப் பகுதியின் பதிவாளருக்கு அதனை நேரடியாகவோ வகுத்துரைக்கப்படக் கூடிய முறையிலோ ஒப்படைத்தல் வேண்டும்:

***வரம்புரை***. ஆனால் அந்தக் குறிப்பாவணமானது மேற்சொன்ன தொண்**ணூ**று நாட்கள் கழிவுற்ற பின்பு மேலும் அறுபது நாட்கள் கால அளவு ஒன்றுக்குள், வகுத்துரைக்கப்படக்கூடிய கூடுதல் கட்டணத்தைச் செலுத்தி, பதிவாளரிடம் ஒப்படைக்கலாம் அல்லது அவருக்கு அனுப்பி வைக்கலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவுக்கான வரம்புரையில் உள்ள எதுவும், 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (a) எனும் கூறின்படியான பணத்தண்டம் எதற்கும் நபர் ஒருவரின் கடப்பாட்டினைப் பாதிக்காது.

**குறிப்பாவணத்தில் கையொப்பமும் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களும்.**

6. 5-ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட குறிப்பாவணம் ஒவ்வொன்றும், திருமணத் தரப்பினர்களாலும் சமய குருவாலும் இரண்டு சாட்சிகளாலும் கையொப்பமிடப்படுதல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய கட்டணம் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

**திருமணத்தைப் பதிவு செய்ய மறுப்பதற்கு அதிகாரம்.**

7. (1) எந்தப் பதிவாளர் முன்பு 5 ஆம் பிரிவின்படியான குறிப்பாவணமானது ஒப்படைக்கப்படுகிறதோ அல்லது அவருக்கு அனுப்பி வைக்கப்படுகிறதோ, அந்தப் பதிவாளர், குறிப்பாவணத்துடன் முன்னிடப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்ததன் பேரிலோ அவரால் கவனிக்கப்பட்ட அல்லது அவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட பிற பொருண்மைகளின் பேரிலோ

(a) அத்தரப்பினர்களுக்கிடையேயான திருமணமானது அத்தரப்பினர்களின் இனமுறைச் சட்டங்களின் படியோ அல்லது வழக்கம் அல்லது வழக்காறு அல்லது மரபு எதனின்படியோ நடத்தப்படவில்லை என்று; அல்லது

(b) தரப்பினர்களின் அல்லது சாட்சிகளின் அல்லது தரப்பினர்களின் அடையாளத்தை உறுதிபடுத்துகிற நபர்களின் அடையாளம் திருமணம் நடந்ததும் நியாயமான ஐயப்பாட்டிற்கு அப்பால் உறுதிபடுத்தப்படவில்லை என்று; அல்லது

(c) அவர் முன்பு வைக்கப்பட்ட ஆவணங்கள் தரப்பினர்களின் திருமணத்தகு நிலையினை நிரூபிக்கவில்லை என்று மனநிறைவடைகிறவிடத்து, அல்லது நம்பக் காரணம் கொண்டிருக்கிறவிடத்து, அவர், தரப்பினர்களை விசாரித்தறிந்த பின்பும் எழுத்து வடிவில் காரணங்களைப் பதிவு செய்த பின்பும், திருமணத்தைப் பதிவு செய்ய மறுக்கலாம் மற்றும்—

(i) தரப்பினர்களின் மற்றும் சாட்சிகளின் அடையாளத்தை அல்லது தம்மிடம் முன்னிடப்பட்ட தகவலின் அல்லது ஆவணங்களின் சரியான தன்மையை உறுதிபடுத்துவதற்காகத் தேவையென கொள்ளப்படும் அத்தகைய மேலுமான தகவலை அல்லது ஆவணங்களை முன்னிடும்படி தரப்பினர்களைக் கோரலாம், அல்லது

(ii) தேவையெனக் கொள்ளப்படுமாயின், அந்த ஆவணங்களை, தரப்பினர் எந்த வட்டாரக் காவல் நிலையத்தின் அதிகார வரம்புக்குள் குடியிருக்கின்றனரோ, அந்த வட்டாரக் காவல் நிலையத்திற்கு, உறுதி செய்வதற்காக சுட்டியனுப்பவும் செய்யலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவில் வகைசெய்யப்பட்டவாறு, மேற்கொண்டு உறுதிசெய்வதன் பேரில், அத்திருமணத்தைப் பதிவு செய்வதற்குத் தடை எதுவும் இல்லையென்று பதிவாளர் மன நிறைவடைகிறவிடத்து, அவர் அதனைப் பதிவு செய்யலாம். அத்திருமணம் பதிவு செய்வதற்குத் தக்கதல்ல என்று பதிவாளர் கருதுவாராயின், அவர், எழுத்து வடிவில், மறுப்பு ஆணை ஒன்றை, அதற்கான காரணங்களைப் பதிவு செய்து பிறப்பிக்கலாம்,

**மாவட்டப் பதிவாளருக்கு மேல்முறையீடு.**

8. (1) 7-ஆம் பிரிவின்படியான பதிவாளரின் ஆணையினால், குறையுற்ற நபர் எவரும், அத்தகைய ஆணையைப் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து முப்பது நாட்கள் கால அளவு ஒன்றுக்குள், வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் மாவட்டப் பதிவாளரிடம் மேல்முறையீடு செய்யலாம்:

***வரம்புரை:*** ஆனால் மாவட்ட பதிவாளர், முதலில் சொல்லப்பட்ட முப்பது நாட்கள் கால அளவு, கழிவுற்ற பின்பு, முன்னிடப்படும் மேல்முறையீடு ஒன்றை, மேல்முறையீட்டாளர் அம்மேல்முறையீட்டினை முதலில் சொல்லப்பட்ட கால அளவுக்குள் முன்னிடாததற்குப் போதிய காரணம் கொண்டிருந்தார் என்று மனநிறைவடைவாராயின், அவர் மேல்முறையீடு ஒன்றை மேலும் முப்பது நாட்கள் கால அளவு ஒன்றுக்குள் அனுமதிக்கலாம்.

(2) மாவட்டப் பதிவாளர், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு கேட்கப்படுவதற்கான வாய்ப்பு ஒன்றை நல்கிய பின்பும், காரணங்களை எழுத்துவடிவில் பதிவு செய்த பின்பும், திருமணத்தைப் பதிவு செய்யும்படி அல்லது பதிவாளரின் ஆணையை உறுதி செய்யும்படி பதிவாளரைப் பணிக்கலாம்.

**8 ஆம் பிரிவின்படியான ஆணைக்கு எதிராக மேல்முறையீடு.**

9. 8-ஆம் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட மாவட்ட பதிவாளரின் ஆணையினால் குறையுற்ற நபர் எவரும், அவ்வாணையைப் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து முப்பது நாட்கள் கால அளவு ஒன்றுக்குள், அத்தகைய ஆணையை எதிர்த்து தலைமைப் பதிவாளரிடம் மேல்முறையீடு செய்யலாம் மற்றும் அத்தகைய மேல் முறையீட்டின் மீது தலைமைப் பதிவாளரின் முடிவே அறுதியானதாகும் மற்றும் அதன்பின் பதிவாளர், அத்தகைய முடிவிற்கு இணங்க செயல்படுதல் வேண்டும்.

**பதிவுச் சான்றிதழை வழங்குதலும் பதிவேட்டினைப் பராமரித்தலும்.**

10. (1) திருமணம் பதிவு செய்யப்பெறுவதன் பேரில், பதிவாளர், வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்தில் தரப்பினர்களுக்கு திருமணப்பதிவுச் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு பதிவாளரும், வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்திலும் முறையிலும் திருமணப் பதிவேடு ஒன்றைப் பராமரித்து வருதல் வேண்டும்.

(3) 5-ஆம் பிரிவின்படி திருமண குறிப்பாவணத்தைப் பெற்றுக்கொண்டதன் பேரில், பதிவாளர், அதனைப் பதிவேட்டில் கோர்த்து இணைத்தல் வேண்டும்.

**திருமணப் பதிவேட்டினைத் தேடுதல்.**

11. (1) கட்டணம் செலுத்துவது தொடர்பான விதிகள் உள்ளடங்கலாக அரசால் இதன் பொருட்டு செய்யப்படும் விதிகள் எவற்றுக்கும் உட்பட்டு, நபர் எவரும்,—

(a) திருமணப் பதிவேட்டில் உள்ள பதிவு எதற்காகவும் பதிவாளரால் தேடுதல் ஒன்றைச் செய்விக்கலாம்; மற்றும்

(b) அத்தகைய பதிவேட்டிலிருந்து, திருமணம் தொடர்பான எடுகுறிப்பு ஒன்றைப் பெறலாம்.

(2) இந்தப் பிரிவின்படி கொடுக்கப்படும் எடுகுறிப்புகள் அனைத்தும் பதிவாளரால் உறுதிச் சான்றளிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அந்தப் பதிவு எந்தத் திருமணம் தொடர்புடையதோ அந்தத் திருமணத்தை நிரூபிப்பதற்கான சான்றாக ஏற்றுக்கொள்ளத்தக்கதாதல் வேண்டும்.

**பதிவேடு பொதுமக்கள் பார்வை யிடுவதற்குரியது எனல்.**

12. திருமணப் பதிவேடானது, அனைத்து நியாயமான நேரங்களிலும், பொதுமக்கள் பார்வையிடுவதற்குரியதாகும் மற்றும் அதிலிருந்து உறுதிச்சான்றளிக்கப்பட்ட எடுகுறிப்புகள், விண்ணப்பத்தின் பேரில், வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் விண்ணப்பதாரருக்கு பதிவாளரால் வழங்கப்படுதல் வேண்டும்.

**திருமணப் பதிவுச் சான்றிதழை சரிபார்ப்பதற்கு வேலை தருநர் முதலானோருக்கு உள்ள பொருப்பு.**

13. வேலை தருநர் அல்லது ஒர் அரசு அல்லது அரசு சார்பு நிறுவன அதிகார அமைப்பு அல்லது நிறுமம் அல்லது பொதுத் துறை நிறுவனம் அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பு எதுவும், மாற்றம் செய்ய அல்லது அதனைப் பதிவு செய்ய விண்ணப்பிக்கும் பணியாளரோ நேர்வுக்கேற்ப, விண்ணப்பதாரரோ, 10 ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட திருமணப் பதிவுச் சான்றிதழின் உறுதிச் சான்றளிக்கப்பட்ட படி ஒன்றினை சமர்ப்பித்தாலன்றி அவர்களின் அலுவலகப் பதிவுருக்களில் அல்லது அலுவலக ஆவணங்கள் எவற்றிலும், தம் பணியாளர்களின் அல்லது எந்த நபருடனான அல்லது வாடிக்கையாளருடனான அல்லது கட்சிக்காரருடனான தங்கள் நடவடிக்கையில் திருமணம் சார்ந்த நிலையில் மாறுதல் அல்லது நியமனதாரர் மாறுதல் போன்ற மாறுதல் எதனையும் செய்தலாகாது.

**தண்டங்கள்.**

14. (1) (a) 5-ஆம் பிரிவினால் கோரப்பட்டவாறு குறிப்பாவணத்தை ஒப்படைக்காமல் அல்லது அனுப்பாமல் விட்டுவிடுகிற அல்லது புறக்கணிக்கிற; அல்லது

(b) குறிப்பாவணத்தில் முக்கியமான விவரம் எதிலும் பொய்யானதாக இருக்கிற மற்றும் அவர் பொய்யானதென அறிந்திருக்கிற அல்லது நம்பக் காரணம் கொண்டிருக்கிற அவ்விவரவுரை எதனையும் செய்கிற; அல்லது

(c) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எவற்றையுமோ அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளையோ மீறுகிற நபர் எவரும், குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டதன்பேரில், ஒர் ஆயிரம் ரூபாய் வரை நீட்டிக்கக்கூடிய பணத்தண்டம் (Fine) விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(2) 5-ஆம் பிரிவுக்கிணங்க குறிப்பாவணத்தை வேண்டுமென்றே முன்னிடத் தவறுகிற பதிவாளர், குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில், மூன்று மாதங்கள்வரை நீட்டிக்கக்கூடிய ஒர் கால அளவுக்கு சிறைத்தண்டனையோ அல்லது ஒர் ஆயிரம் ரூபாய் வரை நீட்டிக்கக்கூடிய பணத்தண்டமோ அல்லது அவை இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**பதிவேட்டினை மறைத்து வைத்திருத்தல், அழித்தல் அல்லது மாற்றுதல் இவற்றிற்குப் பணத்தண்டம்.**

15. திருமணப் பதிவேட்டினை அல்லது அதனின் பகுதி எதனையும் மறைத்து வைத்திருக்கிற, அழிக்கிற அல்லது நேர்மையற்ற வகையில் அல்லது மோசடியாக மாற்றம் செய்கிற நபர் எவரும், குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில், இரண்டு ஆண்டுகள் வரை நீட்டிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனையோ அல்லது பத்தாயிரம் ரூபாய்வரை நீட்டிக்கக்கூடிய பணத்தண்டமோ அல்லது அவை இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**குற்ற வழக்குத் தொடுப்பதற்கு ஒப்பளிப்பு.**

16. இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கத்தக்க குற்றச்செயல் ஒன்றுக்கான குற்றவழக்கானது, இதன் பொருட்டு தலைமைப் பதிவாளரால் பொதுவான அல்லது சிறப்பு ஆணை வாயிலாக அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலர் ஒருவரால் தவிர, தொடரப்படுதலாகாது.

**நிறுமங்களால் செய்யப்படும் குற்றச் செயல்கள்.**

17. (1) இந்தச் சட்டத்தின்கீழ் குற்றச்செயல் ஒன்றை இழைக்கும் நபர் எவரும், ஒரு நிறுமமாக இருக்குமாயின், குற்றச் செயல் இழைக்கப்பட்ட சமயத்தில் நிறுமத்தின் அலுவல்தொழில் நடப்பதற்கு பொறுப்பிலிருந்த, மற்றும் அதற்குப் பொறுப்புடைய ஒவ்வொரு நபரும் அத்துடன் நிறுமமும் அந்தக் குற்றச் செயலைச் செய்தவராகக் கொள்ளப்பட்டு, அதன்படியே அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும் தண்டிக்கப்படுவதற்கும் உள்ளாதல் வேண்டும்.

***வரம்புரை:*** ஆனால் இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அத்தகைய நபர் எவரையும், அவர் அந்தக் குற்றச்செயல் தம்மை அறியாமலேயே இழைக்கப்பட்டது என்று அல்லது அந்தக் குற்றச்செயல் இழைக்கப்படுவதைத் தடுக்க உரிய முயற்சி அனைத்தையும் செலுத்தினார் என்று நிரூபிப்பாராயின், இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள தண்டனை எதற்கும் உள்ளாக்காது.

(2) (1) ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், இந்தச் சட்டத்தின்கீழான ஒரு குற்றச்செயல் ஒரு நிறுமத்தினால் இழைக்கப்பட்டிருந்து அந்தக் குற்றச் செயலானது நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரின் இசைவுடன், அல்லது அவருடைய மறைமுக ஆதரவுடன் இழைக்கப்பட்டிருக்கிறது என்று அல்லது அவர்பாலுள்ள கவனமின்மை எதற்கும் சாட்டத்தக்கதாக இருக்கிறது என்று நிரூபிக்கப்படுகிறவிடத்து, அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் கூட அந்தக் குற்றச்செயலைச் செய்தவராகக் கொள்ளப்பட்டு, அதன்படியே எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு, தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதல் வேண்டும்.

***விளக்கம்:—*** இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக:—

(a) “நிறுமம்” என்றால், ஒரு கூட்டுருமக் குழுமம் என்று பொருள்படும் மற்றும் ஒரு நிறுவகத்தை அல்லது பிற தனி நபர்களின் கழகத்தை உள்ளடக்கும்; மற்றும்

(b) “இயக்குநர்” என்றால், நிறுவகம் ஒன்றைப் பொறுத்தவரை, நிறுவகத்தில் உள்ள ஒரு கூட்டாளியை உள்ளடக்கும்.

**நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு பாதுகாப்பு.**

18. இந்தச் சட்டத்திற்கு அல்லது அதன்படி செய்யப்பட்ட ஒரு விதி அல்லது ஆணைக்கு இணங்க நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யப்படக் கருதப்பட்ட எதற்காகவும் நபர் எவருக்கும் எதிராக, உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்டமுறை நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படுதல் கூடாது.

**பதிவாளர் முதலானோர் பொது ஊழியராவர்.**

**மையச் சட்டம் XLV/1860.**

19. தலைமைப் பதிவாளர், மாவட்டப் பதிவாளர் மற்றும் பதிவாளர் ஒவ்வொருவரும் மற்றும் பிற அலுவலர்கள், இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின் வகை முறைகளுக்கு இணங்க செயற்படுகையில் அல்லது செயற்படுவதாகப் புலப்படுகையில் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 21-ஆம் பிரிவின் பொருளின்படி ஒரு பொது ஊழியராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம்.**

20. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு செயல்வடிவங்கொடுப்பதில் இடர்ப்பாடுகள் எவையும் எழுமாயின், அரசு, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் ஆணை வாயிலாக அந்த இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கு தேவையென அல்லது உகந்ததென தமக்குத் தோன்றுகிறவாறு, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத, அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்.

***வரம்புரை*** : ஆனால் ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுக் கால அளவு ஒன்று கழிவுற்ற பின்பு, செய்யப்படுதலாகாது.

**பணிப்புரை வழங்குவதற்கு அரசுக்குள்ள அதிகாரம்.**

21. அரசு, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைத் திறம்பட செயல்படுத்துவதற்காக, தாம் பொருத்தமெனக் கருதுகிறவாறு, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுடன் முரணாக இல்லாத அத்தகைய பணிப்புரைகளை அவ்வப்போது பதிவாளருக்கும் மாவட்டப் பதிவாளருக்கும் தலைமைப் பதிவாளருக்கும் வழங்கலாம் மற்றும் அவர்கள் அத்தகைய பணிப்புரைக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

**பிற சட்டங்களின் செயற்பாடு பாதிக்கப்படுதல் கூடாது எனல்.**

22. இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதற்கும் கூடுதலாக இருத்தல் வேண்டுமேயன்றி அதனை குறைவுப்படுத்தல் கூடாது.

**பதிவு செய்யாமை யானது திருமணத்தை செல்லா நிலையத் தாக்காது.**

23. இந்தச் சட்டம் பொருந்துகிறதான இந்த மாநிலத்தில் செய்யப்படும் திருமணம் எதுவும், அது, இந்தச் சட்டத்தின்படி பதிவு செய்யப்படவில்லை என்ற பொருண்மையின் காரணமாக மட்டுமே செல்லாநிலையதாகக் கொள்ளப்படுதலாகாது.

**விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.**

24. (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையுமோ அல்லது அவற்றில் எதனையுமோ நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை ஒரு குறிப்பிட்டதொரு நாளன்று நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்த சட்டத்தின்படி வெளியிடப்படும் அறிவிக்கைகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை ஒரு குறிப்பிட்டதொரு நாளன்று நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்படும் நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது ஆணை அல்லது வெளியிடப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில் சட்ட மன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடர் அல்லது அதனை அடுத்த கூட்டத்தொடர், முடிவடைவதற்கு முன்னர் அல்லது அத்தகைய விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கை எதிலும் மாறுதல் எதையும் செய்ய சட்டமன்றப் பேரவையானது முடிவு செய்யுமாயின் அல்லது அந்த விதி அல்லது ஆணை அல்லது

அறிவிக்கை செய்யப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ கூடாது என சட்டமன்றப் பேரவைமுடிவு செய்யுமாயின் அதன் பின்பு அந்த விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கையானது அதன் பின்னர் அவ்வாறு மாற்றி அமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்வுறகேற்ப, நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும் அவ்வாறான மாறுதல் அல்லது நீக்கம் எதுவும், அந்த விதியின்படி, ஆணையின்படி அல்லது அறிவிக்கையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**நிதி பற்றிய குறிப்பு**

இச்சட்ட முன்வடிவானது, பதிவாளர்களின் நியமனத்திற்கும், தலைமைப் பதிவாளரின் நியமனத்திற்கும் வகை செய்கிறது.

2. இச்சட்ட முன்வடிவு சட்டமாக இயற்றப்பட்டால் மாநில தொகு நிதியத்திலிருந்து செலவு செய்ய நேரிடும். எனினும், இந்த நிலையில் கருதியுள்ள இச்சட்டத்தின் விளைவாக ஆண்டொன்றுக்கு ஆகக்கூடிய செலவினத்தை எந்தக் கோணத்திலும் துல்லியமாக மதிப்பிட இயலாது.

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு**

இச் சட்டமுன்வடிவின் 1(3), 4, 5, 6, 8, 10, 20, 21, 24 ஆகிய கூறுகள், அவற்றில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக, நேர்வுக்கேற்ப அறிவிக்கைகளையும் மற்றும் பணிப்புரைகளையும் வெளியிடுவதற்கு அல்லது ஆணைகளைப் பிறப்பிப்பதற்கு அல்லது விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாயந்தவையல்ல.

**நோக்க-காரண விளக்கவுரை**

உச்ச நீதிமன்றம், அதன், சீமா எதிர், அஷ்வனிகுமார் ஏ.ஐ.ஆர் (AIR) 2006 உச்ச நீதிமன்றம் 1158 என்ற வழக்கில் பிறப்பித்த ஆணையில், திருமணத்தைப் பதிவு செய்வதிலிருந்து கிடைக்கத்தக்க அனுமானமானது திருமணம் பதிவு செய்யப்படாத ஒரு நபருக்கு, மறுக்கப்படக்கூடும் என்பது, பதிவு செய்யப்படாததன் விளைவாகும் என்று குறித்துரைத்துள்ளது. வெவ்வேறு சமயங்களைச் சேர்ந்த இந்தியக் குடிமக்களாக இருக்கும் நபர்கள் அனைவருடைய திருமணங்களும், எந்த இடத்தில் திருமணம் நடத்தி வைக்கப்படுகிறதோ அந்த மாநிலத்தில், அந்த இடத்தில் கட்டாயமாகப் பதிவு செய்யப்படுதல் வேண்டும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் கருதுகிறது.

2. எனவே, மாநிலத்தில் வெவ்வேறு சமயங்களைச் சேர்ந்த இந்தியக் குடிமக்களாக இருக்கும் நபர்கள் அனைவருடைய திருமணங்கள் அனைத்தும் கட்டாயமாகப் பதிவு செய்வதற்காக வகை செய்யும் பொருட்டு, இந்த மாநிலத்தில் திருமணங்கள் கட்டாயமாகப் பதிவு செய்யப்படுவதைத் திறனுள்ள வகையில் செயற்படுத்துவதை உறுதி செய்வதற்கு புதிய சட்டம் ஒன்றை இயற்றுவது தேவையானதெனக் கருதப்படுகிறது. அதற்கிணங்கியவகையில், அரசு, அந்த நோக்கத்திற்காக சட்டம் இயற்றுவதென முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்ட முன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**துரைமுருகன்,**
*பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2009—ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2009**

**2007—ஆம் ஆண்டு திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்திய குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம், 2009—ஆம் ஆண்டு திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். **குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

(2) இது, 2008—ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17—ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**தமிழ்நாடு சட்டம் 28/2007.** 2. இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான 2007—ஆம் ஆண்டு திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் 56—ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், ''ஓர் ஆண்டு'' என்று வருகின்ற சொற்றொடருக்குப்பதிலாக, ''இரண்டு ஆண்டுகள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். **56-ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

3. முதன்மைச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும், 56—ஆம் பிரிவின் (5)—ஆம் உட்பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட குழுக்கள் அல்லது 2008—ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17—ஆம் நாளன்று தொடங்கி, 2009—ஆம் ஆண்டு திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமானது, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் தேதியுடன் முடிவடையும் கால அளவின்போது, அத்தகைய குழுக்களாகத் தொடர்ந்து இருந்துவந்த அக்குழுக்கள் சட்டத்தின்படி செல்லத்தக்க வகையில் அமைத்துருவாக்கப் பட்டவையாகவோ அல்லது தொடர்ந்து வந்திருப்பவையாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அந்தக்கால அளவின்போது அத்தகைய குழுக்களால் செலுத்தப்பட்ட அதிகாரம் எதுவுமோ அல்லது புரியப்பட்ட கடமை எதுவுமோ, இந்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டமானது அனைத்து முக்கியமான காலங்களிலும் நடைமுறையில் இருந்துள்ளது போன்று, அக்குழுக்களால் செல்லத்தக்க வகையில் செலுத்தப்பட்டிருப்பதாகவோ அல்லது புரியப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும். **செல்லத் தக்கதாகுதல்.**

**நோக்கக் காரண விளக்கவுரை**

2007–ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகம், திருநெல்வேலி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/2007) 56–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்படி முதல் துணைவேந்தர் நியமனம் செய்யப்பட்ட தேதிக்குப்பின்பு ஆறு மாதங்களுக்குள்ளாகவோ அல்லது அரசு அறிவிக்கை வாயிலாகப் பணிக்கக்கூடிய ஓராண்டுக்கு மேற்படாத அத்தகைய நீண்ட கால அளவிற்குள்ளாகவோ பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவையும், கல்வி மன்றத்தையும் அத்தகைய பிற அதிகார அமைப்புகளையும் அமைத்துருவாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வது அவரது கடமையாகும். மேலும் மேற்சொன்ன 56–ஆம் பிரிவின் (5)–ஆம் உட்பிரிவானது, (1)–ஆம் உட்பிரிவின்படி அதிகார அமைப்பு ஒன்று அமைத்துருவாக்கப்படும். அத்தகைய கால அளவு வரையிலும் அந்தச் சட்டத்தின்படியும் நிலை விதிகளின்படியும் அத்தகைய அதிகார அமைப்பின் அதிகாரங்களில் மற்றும் கடமைகளில் எவற்றையும் செலுத்துவதற்கும் புரிவதற்கும் தற்காலிக அலுவலர் எவரையும் பதவியமர்த்துவதற்கு அல்லது குழு எதனையும் அமைத்துருவாக்குவதற்கு முதல் துணைவேந்தரை இயல்விக்கிறது. மேற்சொன்ன 56–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவானது ஏற்கனவே முடிவடைந்துவிட்டது. பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவும் கல்வி மன்றமும் பிற அதிகார அமைப்புகளும் மேற்சொன்ன கால அளவிற்கு முன்பு அமைத்துருவாக்கப்படவில்லை; மற்றும் துணைவேந்தரால் நியமிக்கப்பட்ட தற்காலிக குழுக்களே அதிகார அமைப்புகளின் அதிகாரங்களைச் செலுத்தியும் கடமைகளைப் புரிந்தும் வருகின்றன. எனவே, அரசானது, மேற்சொன்னச் சட்டத்தின் 56–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவினைத் திருத்துவதன் மூலமாக, பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளை அமைத்துருவாக்குவதற்கு மேலும் ஒரு ஆண்டு கால அளவு ஒன்றை வழங்குவதென முடிவு செய்துள்ளது. தற்காலிகக் குழுக்களினால் செலுத்தப்பட்ட அதிகாரங்களையும் புரியப்பட்ட கடமைகளையும் செல்லத்தக்கதாக்குவதெனவும் கூட அரசு முடிவு செய்துள்ளது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவுகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**முனைவர் க. பொன்முடி,**
*உயர்கல்வித் துறை அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.